**முகவர்களுக்கு சொந்தமான பிரிவில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நிர்மாணித்து இயக்குவதற்குமான அனுமதி வழங்குவதற்காக பரிசீலனைக்கான விண்ணப்பங்களை கோரல்.**

# இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம

# அறிவுறுத்தல் பத்திரம்

**குறிப்பு :**

- விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் எரிபொருள் நிலையங்களை நிறுவுதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல் பற்றிய விபரங்களுக்கு www.energymin.gov.lk என்ற இணையத்தளத்தை பார்க்கவும்.

- விண்ணப்பக் கட்டணம் ரூபா.24,205.10 (ரூ.20,000+VAT+ சமூக பாதுகாப்பு வரி உட்பட) இலங்கை பெற்றேலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மக்கள் வங்கி, கூட்டுறவு கிளை (cooperative Branch) கணக்கு இல. 004100110208633ற்கு வைப்பிலிட்டு உரிய வங்கியின் வைப்பு சீட்டினை (Receipt) விண்ணப்பத்துடன் சமர்பிக்கவும்.

- விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணத்தினை சமர்பிப்பதோடு அவ்வாறு சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்து முன்னுள்ள பெட்டியில் குறியை (✓) என குறிக்க வேண்டும். உரிய ஆவணங்களுடன் சமர்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றதை கவனிக்கவும்.

| இல. | | விண்ணப்பத்துடன் சமர்பிக்க வேண்டிய அடிப்படை ஆவணங்கள் மற்றும் தேவைகள் | (✓) |
|---|---|---|---|
| 01 | | சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் | |
| 02 | i | திரும்ப செலுத்தப்படாத விண்ணப்ப கட்டணம் வங்கியில் செலுத்தப்பட்டதை உறுதி செய்ய வைப்பு சீட்டின் மூலபிரதி. | |
| | ii | சட்டத்தரணி ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட உத்தேச நிலத்துக்கு உரிய உறுதியின் பிரதி | |
| | iii | சட்டத்தரணி ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட தோம்பு பிரதி | |
| | iv | உத்தேச நிலம் தொடர்பாக வழக்குகள் இல்லை என சட்டத்தரணி ஒருவரால் வழங்கப்பட்ட சத்திய கடதாசி | |
| | v | விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டின் தெளிவான பிரதி | |
| | vi | விண்ணப்பதாரர் வியாபார நிறுவனமாக இருந்தால், தொடர்புடைய வியாபர பதிவு சான்றிதழின் பிரதி | |
| | vii | உத்தேச நிலத்தின் இருப்பிடத்தைக் காட்டும் வரைவுப்படம் (சாலை அருகில் உள்ள நகரம், பிரதேச செயலக பிரிவு, கிராம அலுவலர் பிரிவு உட்பட) | |

- உத்தேச நிலத்தின் சட்ட பூர்வ உரிமையை உறுதிப்படுத்த கோரப்பட்ட ஆவணங்களை விண்ணபித்துள்ள படிவத்தின் குறிப்பிட்டுள்ளவாறு பரிந்துறைகளை பெற்று சமர்பிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

- இது சம்மந்தமாக மதிப்பீட்டுச் செயற்பாட்டில் கோரப்பட்ட ஆவணங்கள் உத்தேச இடம் அமைந்துள்ள மாவட்டத்தில் 10 வருடங்களுக்கு மேலாக அனுபவம் உள்ள சட்டத்தரணியின் சான்றிதழின் கீழ் 03 பிரதிகளுடன் இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனதுடன் சமர்பிக்கப்பட வேண்டும்.

- விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட வேண்டிய பிராந்திய காரியாலயங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பகுதியின் முகவரி மற்றும் ஏனைய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிலத்தின் கேந்திர நிலையம் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை உறுதிப்படுத்துதல**

எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட நிலம், சுற்றுச்சூழல் பாதிப்புகளால் பாதிக்கப்படாத பொருத்தமான இடமாக இருத்தல் வேண்டும்.

2. முன்மொழியப்பட்ட நிலமானது, எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு முன் அனுமதி தேவைப்படும் அரசாங்க நிறுவனங்களின் நிபந்தனைகளை இலகுவாக பூர்த்தி செய்யும் காணியாக இருத்தல் வேண்டும்.

3. முன்மொழியப்பட்ட காணி குறைந்தது 40 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்டிருக்க வேண்டும். (இவ் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில், அப்பகுதியின் மக்களின் நலன் கருதி, 40 பேர்ச்களுக்கு குறைவான பரப்பளவைக் கொண்ட ஒரு களத்திற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டால், வலுசக்தி அமைச்சு சிறப்பு விசாரணை நடத்தி, அப் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையமொனறை நிறுவி பராமரிக்க முடியுமான என்பது பற்றியதொரு தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்)

4. பிரதான வீதியை எதிர்கொள்ளும் முன்மொழியப்பட்ட காணியின் / நிலத்தின் நீளம் குறைந்தபட்சம் 125 அடியாக இருக்க வேண்டும். (நகர்ப்புறங்களில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையத்தின் தேவையின் காரணமாக மேறகுறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில், வலுசக்தி அமைச்சு சிறப்பு விசாரணையொன்ற நடத்தி தீர்மானத்தை மேற்கொள்ளலாம்)

5. விண்ணப்பதாரர் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனம் முன்மொழியப்பட்ட நிலத்தின் உரிமை / குத்தகை உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். குத்தகை உரிமையில் நிலம் கையகப்படுத்தப்பட்டிருந்தால், அது விண்ணப்பதாரர் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் குறைந்தது 15 ஆண்டுகள் இருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்திடம் முன்மொழியப்பட்ட நிலம் அடமானம் வைக்கப்படும் சந்தர்ப்பத்தில், இத் திட்டத்திற்கு ஆட்சேபனை இல்லை என்று சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும்.

6. முன்மொழியப்பட்ட நிலத்தின் சட்டப்பூர்வ உரிமையை நிரூபிப்பது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். முன்மொழியப்பட்ட காணியின் சட்டப்பூர்வ உரிமையை நிரூபிப்பதற்காக, காணியின் உறுதிப்பத்திரம், திட்டம், உரிமை அறிக்கை, 30 வருடங்கள் தொடர்பான ஆவணங்கள், உடைமையற்ற சான்றிதழ் மற்றும் வீதிப் பாதை, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரை, சம்பந்தப்பட்ட திட்டத்திற்கும், விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வாக்குமூலத்திற்கும் ஆட்சேபனை இல்லை என்று குறிப்பிட்டு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட கடிதம், முன்மொழியப்பட்ட நிலம் தொடர்பான சட்டச் சிக்கல்கள் ஏதுமில்லை என்று குறிப்பிட்டு, அந்தப் பகுதியில் 10 ஆண்டுகளுக்கும் மேலான கள அனுபவமுள்ள வழக்கறிஞரால் சரிபார்த்து உரிய ஆவணங்களுடன் , விண்ணப்பதாரர் நிலத்தின் மீது உரிமையுள்ளவர் என்பதைக் குறிப்பிடும் சான்றிதமுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வணிக வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்தல்**

1. அந்தந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் எரிபொருள் விநியோகம் மற்றும் கேள்வியின் தாக்கம், முன்மொழியப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு உரித்தான பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை, முன்மொழியப்பட்ட வீதியில் வாகனங்களின் போக்குவரத்து அடர்த்தி

2. முன்மொழியப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ள பகுதியின் மக்கள் தொகை அடர்த்தி பற்றிய தகவல்களை ஆய்வு செய்தல்.

3. முன்மொழியப்பட்ட இடத்திலிருந்து அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான தூரம் மற்றும் இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சாலைக்கு அருகில் (பகுதி/எதிர்) அமைந்துள்ள விதம் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

4. பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களை ஆராய்தல்.

5. முன்மொழியப்பட்ட இடம், இவற்றோடு தொடர்புடைய வழிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புடைய வீதிகளின் இருப்பிடத்தைக் கண்டறிதல்.
6. முன்மொழியப்பட்ட இடத்தில் ஒரு புதிய எரிபொருள் நிரப்பு நிலையத்தை பராமரிப்பதன ̇மூலோபாய மற்றும் வணிக முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்தல்.

**நிதி திறன் மற்றும் வணிகத் திறனை உறுதிப்படுத்துதல்**

1. விண்ணப்பதாரர் இலங்கை குடியுரிமையை நிரூபித்தல் வேண்டும்

2. விண்ணப்பதாரர் பொலிஸ் அனுமதி சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

3. எரிபொருள் நிரப்பு நிலையத்தை உருவாக்க விரும்பும் முதலீட்டாளரின் நிதித் திறனை மதிப்பிடுவது எரிபொருள் விநியோக முகவரின் பொறுப்பாகும். மேலும் அதற்குத் தேவையான துணைத் தகவல்கள் கள அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

4. தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் முன்மொழியப்பட்ட திட்டம் மற்றும் மதிப்பீடுகளுக்கான (BOQ) ஒப்புதல்கள் விசாரணைகளின் பின்னர், விண்ணப்பதாரர் தானாக முன்வந்து சம்பந்தப்பட்ட முதலீட்டைச் செய்வதற்கு எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளித்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் நிர்மாணப் பணிகள் தொடர்பாக எரிபொருள் வழங்கும் நிறுவனத்துடன் ஒரு சிறப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடல் வேண்டும். நிர்மாணப் பணிகள் ஒரு வருடத்திற்குள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் மற்றும் அதற்குள் நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்யத் தவறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் வலுசக்தி அமைச்சகத்திடம் கால நீட்டிப்பு தொடர்பாக வழங்கல் முகவர்கள் மூலம் மேல்முறையீடு செய்ய முடியும். மேலும், சம்பந்தப்பட்ட வழங்குனரின் சிபார்சின் பேரில் அத்தகைய அனுமதிப்பத்திரங்களை சரிபார்ப்பது வலுசக்தி அமைச்சின் விருப்பத்தின் பேரிலேயே இருத்தல் வேண்டும்.

6. முதலீட்டாளருக்குச் உரித்தான பிற வணிகங்கள் மற்றும் அவற்றின் தன்மை பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் எதிர்கால வணிகத் திட்டங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப்படல் வேண்டும்.